www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

Coimbatore

12 Register No. 12525

# அரையாண்டுத் தேர்வு – 2024

## தமிழ்

நேரம் : 3.00 மணி மதிப்பெண்கள் : 90

பகுதி - I

I. அனைத்து வினாக்களுக்கும் விடையளி. 14 x 1 = 14

1. இலக்கியத்தையம் மொழியையும் ஒருசேரப் பேசுகின்ற இலக்கண நூல்
   அ) யாப்பருங்கலக்காரிகை ஆ) தண்டியலங்காரம் இ) தொல்காப்பியம் ஈ) நன்னூல்
2. பொய்யா வானம் புதுப்பெயல் பொழிந்தன. அடிக்கோடிட்ட சொல்லின் இலக்கணக் குறிப்பு
   அ) வினைத்தொகைஆ) உரிச்சொல் தொடர் இ) இடைச்சசொல் தொடர் ஈ)ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சம்
3. இவற்றை வாயிலுக்கே சென்று இன்முகத்துடன் வரவேற்பாயாக என்று ஜலாலுத்தீன் ரூமி குறிப்பிடுவது
   அ) வக்கிரம் ஆ) அவமானம் இ) வஞ்சனை ஈ) இவை அனைத்தும்
4. "காவினெம் கலனே: சுருக்கினெம் கலப்பை" - இத்தொடரில் 'கலன்' உணர்த்தும் பொருள்
   அ) போர்க்கருவி ஆ) தச்சுக்கருவி இ) இசைக்கருவி ஈ) வேளாண் கருவி
5. 'விளியறி ஞமலி' - இதில் குறிப்பிடப்படும் விலங்கு எது? அ) எருது ஆ) குதிரை இ) நாய் ஈ) யாழி
6. வேறுபட்டதைக் குறிப்பிடுக. அ) அண்மைக் காட்சித்துணிப்பு ஆ) சேய்மைக் காட்சித் துணிப்பு
   இ) நடுக்காட்சித் துணிப்பு ஈ) காட்சி மறைவு
7. "அல்லல் படுப்பதூம் இல்" - எவரோடு பழகினால்?
   அ) வாள்போல் பகைவர் ஆ) மெய்ப்பொருள் காண்பவர் இ) எண்ணியாங்கு எய்துபவர் ஈ) தீயினத்தார்
8. 'பலர் துஞ்சவும் தான் துஞ்சான்'- விழித்திருந்தவரும் அவரைப் பாடியவரும்
   அ) சோழன் நெடுங்கிள்ளியை , பரணர் ஆ) சோழன் நெடுங்கிள்ளியை, கோவூர்கிழார்
   இ) கணைக்கால் இரும்பொறையை, கபிலர் ஈ) கரிகாலனை, உருத்திரங்கண்ணனார்
9. சிறுபாணாற்றுப்படை காட்டும் பாட்டுடைத் தலைவனின் இன்றைய நிலப்பகுதி
   அ) உதகமண்டலம் ஆ) விழுப்புரம் இ) திண்டிவனம் ஈ) தருமபுரி
10. பொருந்தாத ஒன்றைக் கண்டறிக
    அ) தனித்தமிழ்த் தந்தை - 1, மு.வரதராசனார்
    ஆ) ஆராய்ச்சிப் பேரறிஞர் - 2, மயிலை சீனி.வேங்கடசாமி
    இ) தமிழ்த்தென்றல் - 3, திரு.வி.க.
    ஈ) மொழி ஞாயிறு - 4, தேவநேயப் பாவாணர்
11. சங்க இலக்கியத்தில், அகத்திணை மாந்தர்களின் உள்ளத்து உணர்வுகளைக் குறிப்பாக உணர்த்தும் குறியீடுகள்
    அ) உவமை ஆ) உவமேயம் இ) உத்தி ஈ) உள்ளுறை உவமை
12. சாப்ளினின் சாதனைப் படமான 'தி கிரேட் டிக்டேட்டர்' வெளியான ஆண்டு
    அ) 1930 ஆ) 1950 இ) 1960 ஈ) 1940
13. வெண்பாவின் ஓசை அ) துள்ளல் ஆ) அகவல் இ) தூங்கல் ஈ) செப்பல்
14. பிழையற்ற தொடரைக் கண்டறிக.
    அ) சென்னையிலிருந்து நேற்று வந்தான் ஆ) கோவலன் மதுரைக்குச் சென்றது
    இ) பறவைகள் நெல்மணிகளை வேகமாகக் கொத்தித் தின்றன ஈ) குதிரையும் யானையும் வேகமாக ஓடியது

பகுதி - II பிரிவு – 1

ஏவையேனும் மூன்றனுக்கு விடையளி. 3 x 2 = 6

15. நிலையாமை குறித்து, சவரி உரைக்கும் கருத்து யாது?
16. செல்வம் இருப்பதற்கான வழியாக வள்ளுவம் உரைப்பன யாவை?
17. 'மூச்சு நின்றுவிட்டால் பேச்சும் அடங்கும்' இக்கவிதை வரிக்குப் பொருத்தமான பழமொழி ஒன்றை எழுதுக.
18. முகம் முகவரியற்றுப் போனதற்கு சுகந்தி சுப்பிரமணியன் கூறும் காரணத்தை எழுதுக.

பிரிவு – 2

ஏவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2 x 2 = 4

19. பருவத்தே பயிர் செய் - நேர மேலாண்மையோடு பொருத்தி எழுதுக
20. எழுத்தாணியின் வகைகள் யாவை?
21. மனிதன் தன் பேராசை காரணமாக இயற்கை வளங்களைக் கடுமையாகச் சேதப்படுத்தியதன் விளைவை இன்று சந்தித்துக் கொண்டிருக்கிறான் - இரு தொடர்களாக்குக.

பிரிவு – 3

ஏவையேனும் ஏழனுக்கு விடை தருக. 7 x 2 = 14

22. விடைக்கேற்ற வினா அமைக்க.
    "யதார்த்த நிகழ்வைப் படைப்பாளுமையுடன் வெளிப்படுத்துவதே ஆவணப்படம்" என்கிறார் கிரியோர்சன்
23. தொடரில் இடம் பெற்றுள்ள மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக.
    வனவிலங்குக் காப்பகத்தில் சிங்கக் குட்டியும் யானைக்குட்டியும் கண்டேன்.
24. பொருள் வேறுபாடு அறிந்து தொடர் அமைக்க
    அ) தின்மை – திண்மை (அல்லது) ஆ) களம் - கலம்
25. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக. புள்ளைக்கு உடம்பு சரியில்லை மூணு நாளா சிரமப்படுது.
26. ஏதேனும் ஒன்றனுக்கு புணர்ச்சி விதி தருக. அ) தலைக்கோல் ஆ) அருங்கானம்
27. ஏதேனும் ஒன்றனுக்கு உறுப்பிலக்கணம் தருக. அ) அறிந்து ஆ) கண்டான்
28. கலைச் சொல்லாக்கம் தருக. அ) **Sound Effect** ஆ) **Take Off**



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

29. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்கவும். அ) தாமரை ஆ) தலைமை
30. பாவிகம் - விளக்குக.

பகுதி - III பிரிவு – அ

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2 x 4 = 8

31. நாட்டிய அரங்கின் அமைப்பை இளங்கோவடிகள் காட்சிப்படுத்தும் பாங்கு குறித்து உங்கள் கருத்தை எழுதுக.
32. "செம்பரிதி மலைமேட்டில் தலையைச் சாய்ப்பான்
செந்நிறத்துப் பூக்காடாம் வானமெல்லாம்"
• தோடர் வெளிப்படுத்தும் காட்சி நயத்தை விளக்குக.
33. பங்குனி உத்திரத் திருவிழா நடைபெற்ற முறையைத் திருஞானசம்பந்தர் எவ்வாறு பதிவு செய்கிறார்?
34. "ஈசன் மகன் நின்றனர் ஓர் ஏழையென ஓர்மின்" இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

பிரிவு – ஆ

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2 x 4 = 8

35. திரைப்படத்தின் காட்சியின் ஆற்றலை எடுத்துக்காட்டுடன் புலப்படுத்துக.
36. வேளாண் மேலாண்மை குறித்து நீவீர் பரிந்துரைப்பவற்றை எழுதுக.
37. பண்டைய விரிந்த குடும்பத்தின் தொடர்ச்சியே இன்றைய கூட்டுக்குடும்பம் - விளக்கம் எழுதுக.
38. மணலில் எழுதியது முதல் தற்காலம் வரை எழுதும் முறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைத் தொகுத்து உரைக்க.

பிரிவு – இ

எவையேனும் மூன்றனுக்கு விடை தருக. 3 x 4 = 12

39. அ) ஏகதேச உருவக அணியைச் சான்றுடன் விளக்குக. (அல்லது)
ஆ) அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்து ஒழுகுவார் - இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக
40. அ) பாடாண் திணையைச் சான்றுடன் விளக்குக. (அல்லது)
ஆ) செவியறிவுநூஉ – துறையைச் சான்றுடன் விளக்குக.
41. இலக்கிய நயம் பாராட்டுக. (மையக் கருத்துடன் ஏற்புடைய மூன்று நயங்களை எழுதுக)

வெட்டியடிக்குது மின்னல் - கடல்
வீரத் திரைகொண்டு விண்ணை யிடிக்குது
கொட்டியடிக்குது மேகம் - கூ
கூவென்று விண்ணைக் குடையுது காற்று
சட்டச்சட சட்டச்சட டட்டா – என்று
தாளங்கள் கொட்டிக் கனைக்குது வானம்
எட்டுத்திசையும் இடிய – மழை
எங்ஙனம் வந்ததடா தம்பி வீரா!
- பாரதியார்

42. பின்வரும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக.
அ) குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை (அல்லது) ஆ) எறும்பு ஊரக் கல்லும் தேயும்
43. தமிழாக்கம் தருக:
**Popular as the 'cultural capital' of India, Tamil Nadu is extremely well-known for its Marvellous temples and other architectural gems. The State rose to prominence primarily because of its well-known and outstanding Tanjore paintings that flourished at the time of Chola dynasty in ancient Tanjavoor. In this traditional art form, the paintings showcase the embellished form of the sacred deities of the region.**
43. காது கேளாதவர்களுக்கான மாற்று வினா
கீழ்க்காணும் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.
நகரங்கள் சமூகத்தின் பண்பாட்டுக் கூறுகளுள் முதன்மையானவையாகும். சமூகத்தின் கடந்தகால வரலாற்றுக்கும், நிகழ்கால வாழ்விற்கும், எதிர்கால வளர்ச்சிக்கும் அவை துணை நிற்கின்றன. தென்னிந்தியாவின் நுழைவுவாயில் என்றழைக்கப்படும் 'சென்னை' இன்று தமிழகமெங்கும் பரவி வாழும் தமிழர்களின் பண்பாட்டு அடையாளம். அவ்வகையில் இந்தியாவின் முதன்மை நகரங்களுள் ஒன்றாகவும் தமிழகத்தின் தலைநகரமாகவும் திகழ்கின்ற சென்னையின் வரலாறும், வளர்ச்சியும் நாம் அறிந்து கொள்ள வேண்டிய ஒன்று.
வினாக்கள்
1) பண்பாட்டுக் கூறுகளுள் முதன்மையானவை எது? 2)தென்னிந்தியாவின் நுழைவு வாயில் என அழைக்கப்படும் நகரம் எது? 3) நகரங்கள் சமூகத்தில் எவ்வாறு துணை நிற்கின்றன? 4)நாம் அறிய வேண்டிய சிறப்புகள் யாவை?

பகுதி - IV

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. 3 x 6 = 18

44. அ) திருக்குறள் ஒரு வாழ்வியல் இலக்கியம் - நிறுவுக. (அல்லது)
ஆ) நெடுநல்வாடையில் நக்கீரர் காட்டும் மழைக்கால வருணனையைச் சொல்லில் வடிக்க.
45. அ) "ஒவ்வொரு நகரத்துக்கும் வரலாறும் வடிவழகும் உண்டு" – நீங்கள் பார்த்த அல்லது வாழ்ந்த ஒரு நகரம் குறித்து இருபக்க அளவில் கட்டுரை எழுதுக. (அல்லது)
ஆ) மயிலையார் ஓர் "ஆராய்ச்சிப் பேரறிஞர்" என்னும் கூற்றினைச் சான்றுகளுடன் கட்டுரையாக்குக.
46. அ) பாரதியின் கடிதம் வாயிலாக நீங்கள் அறிந்து கொண்ட மொழிப்பற்று, சமூகப்பற்று ஆகியவற்றை விவரிக்க.
(அல்லது) ஆ) மகா நடிகரைக் கண்ட பாலச்சந்திரனின் மனவோட்டத்தை நயத்துடன் எழுதுக.

பகுதி - V

4 + 2 = 6

47. அடிபிறழாமல் செய்யுள் வடிவில் விடை தருக.
அ) "விண்வேறு" ........ எனத் தொடங்கும் "இதில் வெற்றி பெற" பாடலை அடிபிறழாமல் எழுதுக.
ஆ) 'உடைத்து' என முடியும் குறளை அடிபிறழாமல் எழுதுக.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com